1987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபத்தைத் திருமணங்கள் நடைபெறும் வகையில் பழுதுபார்க்கவும், சமையல் பாத்திரங்கள் போன்றவைகளை வாங்கவும் சுமார் ரூ. 2 இலட்சம் தேவைப் படும். தேவையான தொகையினை ஒன்றியப் பொது நிதியி லிருந்து செலவிட அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி தற்போது இல்லை.

ஊத்துக்குளி ஒன்றிய மருந்தகம்.

108—(*வினா எண். 1796)—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்துக்குளியிலுள்ள ஒன்றிய மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றியமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்வி எழாது.

டாக்டர் அ. பொன்னுசமி : பெருமைபெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, இந்த ஊத்துக்குளி ஏரியாவில் 20 ஆயிரத் திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டும் என்று அரசு விரும்பு கிற நேரத்தில், ஊத்துக்குளியிலும் இதுபோன்ற ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தைப் பற்றியது. ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

புளியங்குடி அரசு மருத்துவமனை.

109—(*வினா எண். 3512)—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புளியங்குடி அரசு மருத்துவமனை எப்பொழுது கட் டப்படும் ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): புளியங்குடி அரசு மருந்தகத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட 1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணியாக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இந்தப் புளியங்குடி சுமார் 50 ஆயிரம் மக்கள், அதாவது ஜனத்தொகை கொண்ட இடம். எனவே, அங்கே 50 படுக்கைகள், ரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்ரே பிரிவு, பிரசவ வசதிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தும்போது, இதுவும் கவனிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை ஆரம்பித்தல்.

110—(*வினா எண். 4305)—திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

குளத்தூர் தொகுதி, பேராம்பூரில் புதிய சித்த மருத்துவமனை.

111—(*வினா எண். 10654)—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.